# இறையச்சத்தின் சிறப்புகள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு





هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# இறையச்சத்தின் சிறப்புகள் 1

## அல்லாஹ் நேசிக்கின்றான்

إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُتَّقِينَ

நிச்சயமாக அல்லாஹ்
பயபக்தியுடையோரை நேசிக்கின்றான்.

அல்குர்ஆன் 9:4

# இறையச்சத்தின் சிறப்புகள் 2

## அல்லாஹ்விடத்தில் மிக்க கண்ணியமானவர்

اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ اَتْقٰكُمْ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ

உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன் 49:13

# இறையச்சத்தின் சிறப்புகள் 3

## அல்லாஹ் பயபக்தி உடையோருடன் இருக்கின்றான்

إِنَّ اللَّهَ مَعَ الَّذِينَ اتَّقَوْا وَّالَّذِينَ هُم مُّحْسِنُونَ

நிச்சயமாக எவர் பயபக்தி உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களுடனும், எவர் நற்செயல் புரிகின்றார்களோ அவர்களுடனும் அல்லாஹ் இருக்கிறான்.

அல்குர்ஆன் 16: 128

هداية
جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# இறையச்சத்தின் சிறப்புகள் 4

## பயபக்தியுடையோர்
## இறை நேசத்திற்கு உரியவர்கள்

أَلَآ إِنَّ أَوْلِيَآءَ ٱللَّهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا
هُمْ يَحْزَنُونَ ۚ ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَكَانُوا۟ يَتَّقُونَ ط

(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை, அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

அவர்கள் ஈமான் கொண்டு (அல்லாஹ்விடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள்.

அல்குர்ஆன் 10: 62,63

# இறையச்சத்தின் சிறப்புகள் 5

## பயபக்தி உடையோருக்கு
## ஈருலகிலும் நற் செய்தி உண்டு

لَهُمُ الْبُشْرٰى فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَفِى الْاٰخِرَةِ ؕ لَا
تَبْدِيْلَ لِـكَلِمٰتِ اللّٰهِ ؕ ذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ ؕ

அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும், மறுமையிலும் நன்மாராயம் உண்டு. அல்லாஹ்வின் வாக்கு(றுதி)களில் எவ்வித மாற்றமுமில்லை, இதுவே மகத்தான பெரும் வெற்றி ஆகும்.

அல்குர்ஆன் 10: 64

# இறையச்சத்தின் சிறப்புகள் 6

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## பயபக்தி உடையோருக்கு கிடைக்கும் பல விதமான பாக்கியங்கள்

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ إِن تَتَّقُوا۟ ٱللَّهَ يَجْعَل لَّكُمْ فُرْقَانًا وَيُكَفِّرْ عَنكُمْ
سَيِّـَٔاتِكُمْ وَيَغْفِرْ لَكُمْ ۗ وَٱللَّهُ ذُو ٱلْفَضْلِ ٱلْعَظِيمِ

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்வீர்களானால் அவன் உங்களுக்கு (நன்மை தீமையைப்) பிரித்தறிந்து நடக்கக்கூடிய நேர்வழி காட்டுவான். இன்னும் உங்களை விட்டும் உங்கள் பாவங்களைப் போக்கி உங்களை மன்னிப்பான். ஏனெனில் அல்லாஹ் மகத்தான அருட்கொடை உடையவன்.

அல்குர்ஆன் 08:29

# இறையச்சத்தின் சிறப்புகள் 7-A

## அல்குர்ஆனின் மூலம் நல்லுபதேசம் பெறுபவர்கள்

ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ ۛۚ فِيْهِ ۛۚ هُدًى لِّلْمُتَّقِيْنَ ۙ

இது (அல்லாஹ்வின்) திருவேதமாகும்,
இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை,
பயபக்தி உடையோருக்கு (இது)
நேர்வழிகாட்டியாகும்.

அல்குர்ஆன் 02:02

# இறையச்சத்தின் சிறப்புகள் 7-B

## அல்குர்ஆனின் மூலம் நல்லுபதேசம் பெறுபவர்கள்

هَٰذَا بَيَانٌ لِّلنَّاسِ وَهُدًى وَمَوْعِظَةٌ لِّلْمُتَّقِينَ

இது மனிதர்களுக்கு (சத்தியத்தின்) தெளிவான விளக்கமாகவும், பயபக்தி உடையோருக்கு நேர் வழிகாட்டியாகவும், நற்போதனையாகவும் இருக்கின்றது.

அல்குர்ஆன் 03: 138

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# இறையச்சத்தின் சிறப்புகள் 8

## இறையருளுக்கு உரியவர்கள்

وَرَحْمَتِىْ وَسِعَتْ كُلَّ شَىْءٍ ؕ فَسَاَكْتُبُهَا لِلَّذِيْنَ يَتَّقُوْنَ وَيُؤْتُوْنَ
الزَّكٰوةَ وَالَّذِيْنَ هُمْ بِاٰيٰتِنَا يُؤْمِنُوْنَ

என்னுடைய அருளானது எல்லாப் பொருள்களிலும் (விரிந்து, பரந்து) சூழ்ந்து நிற்கிறது, எனினும் அதனை பயபக்தியுடன் (பேணி) நடப்போருக்கும், (முறையாக) ஜகாத் கொடுத்து வருவோருக்கும் நம்முடைய வசனங்களை நம்புகிறவர்களுக்கும் நான் விதித்தருள் செய்வேன்"

அல்குர்ஆன் 07: 156

# இறையச்சத்தின் சிறப்புகள் 9

## பயபக்தி உடையவர்களிடமிருந்து நற்செயல்கள் ஒப்புக்கொள்ளப்படும்

إِنَّمَا يَتَقَبَّلُ اللَّهُ مِنَ الْمُتَّقِينَ

மெய்யாகவே அல்லாஹ் ஏற்றுக்
கொள்வது பயபக்தி
உடையவர்களிடமிருந்து தான்.

அல்குர்ஆன் 05: 27

# இறையச்சத்தின் சிறப்புகள் 10

## வாழ்க்கை வசதிகளை உண்டாக்குவான்

وَمَنْ يَتَّقِ اللَّهَ يَجْعَلْ لَهُ مَخْرَجًا

وَيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்கின்றாரோ, அவருக்கு அவன் (தக்க ஒரு) வழியை உண்டாக்குவான். அ(த்தகைய)வருக்கு, அவர் எண்ணியிராத புறத்திலிருந்து, அவன் உணவு (வசதி)களை அளிக்கிறான்

அல்குர்ஆன் 65: 02,03

# இறையச்சத்தின் சிறப்புகள் 11

## இறை மன்னிப்பும், மகத்தான நற்கூலியும் உண்டு

وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يُكَفِّرْ عَنْهُ سَيِّاٰتِهٖ وَيُعْظِمْ لَهٗۤ اَجْرًا

எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுகிறாரோ, அவரை அவருடைய பாவங்களை விட்டும் நீக்கி, அவருக்கு (நற்) கூலியையும் மகத்தானதாக ஆக்குகின்றான்.

அல்குர்ஆன் 65: 05

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# இறையச்சத்தின் சிறப்புகள் 12

## எதிரிகளின் சூழ்ச்சிகளிலிருந்து அவர்களுக்கு அல்லாஹ்வின் பாதுகாப்பு

وَإِن تَصْبِرُوا وَتَتَّقُوا لَا يَضُرُّكُمْ كَيْدُهُمْ شَيْئًا
إِنَّ اللَّهَ بِمَا يَعْمَلُونَ مُحِيطٌ

நீங்கள் பொறுமையுடனும், பயபக்தியுடனும் இருந்தால் அவர்களுடைய சூழ்ச்சி உங்களுக்கு எந்தத் தீமையும் செய்யாது.நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதை (எல்லாம்) சூழ்ந்து அறிகிறவன்.

அல்குர்ஆன் 03: 120

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# இறையச்சத்தின் சிறப்புகள் 13

## ஷைத்தானின் சூழ்ச்சியை விழிப்புணர்வோடு காண்பவர்கள்

إِنَّ الَّذِينَ اتَّقَوْا إِذَا مَسَّهُمْ طَٰٓئِفٌ مِّنَ الشَّيْطَٰنِ
تَذَكَّرُوا فَإِذَا هُم مُّبْصِرُونَ ج

நிச்சயமாக எவர்கள் (அல்லாஹ்வுக்கு) அஞ்சுகிறார்களோ, அவர்களுக்குள் ஷைத்தானிலிருந்து தவறான எண்ணம் ஊசலாடினால், அவர்கள் (அல்லாஹ்வை) நினைக்கின்றார்கள், அவர்கள் திடீரென விழிப்படைந்து (ஷைத்தானின் சூழ்ச்சியைக்) காண்கிறார்கள்.

அல்குர்ஆன் 07: 201

هداية
جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# இறையச்சத்தின் சிறப்புகள் 14

## உண்மையான நட்பைப் பேணுபவர்கள்

اَلْاَخِلَّآءُ يَوْمَىِٕذٍۭ بَعْضُهُمْ لِبَعْضٍ عَدُوٌّ اِلَّا الْمُتَّقِيْنَ ؕ

பயபக்தி உடையவர்களைத் தவிர,
நண்பர்கள் அந்நாளில் சிலருக்குச் சிலர்
பகைவர்கள் ஆகிவிடுவார்கள்.

அல்குர்ஆன் 43: 67

# இறையச்சத்தின் சிறப்புகள் 15-A

## மறுமையின் நற்பாக்கியங்கள் உண்டு

إِنَّ الْمُتَّقِينَ فِي ظِلَالٍ وَعُيُونٍ

وَفَوَاكِهَ مِمَّا يَشْتَهُونَ

كُلُوا وَاشْرَبُوا هَنِيئًا بِمَا كُنْتُمْ تَعْمَلُونَ

நிச்சயமாக, பயபக்தி உடையவர்கள் (குளிர்) நிழல்களிலும், நீர்ச் சுனைகளிலும் இருப்பார்கள்.

இன்னும், அவர்கள் விரும்பும் கனிவகைகளும் உண்டு.

"நீங்கள் செய்து கொண்டிருந்த (நல்ல) செயல்களின் காரணமாக, சிரமமின்றி, தாராளமாக புசியுங்கள், இன்னும் பருகுங்கள் (என்று கூறப்படும்).'

அல்குர்ஆன் 77: 41-43

# இறையச்சத்தின் சிறப்புகள் 15-B

## மறுமையின் நற்பாக்கியங்கள் உண்டு

اِنَّ الْمُتَّقِيْنَ فِىْ جَنّٰتٍ وَّنَهَرٍ

فِىْ مَقْعَدِ صِدْقٍ عِنْدَ مَلِيْكٍ مُّقْتَدِرٍ

நிச்சயமாக பயபக்தி உடையவர்கள் சுவர்க்கச் சோலைகளில் (அவற்றிலுள்ள) ஆறுகளில் இருப்பார்கள்.

உண்மையான இருக்கையில் சர்வ வல்லமையுடைய அரசனின் (அருள்) அண்மையில் இருப்பார்கள்.'

அல்குர்ஆன் 54: 54,55

# இறையச்சத்தின் சிறப்புகள்

15-C

## மறுமையின் நற்பாக்கியங்கள் உண்டு

زُيِّنَ لِلَّذِيْنَ كَفَرُوا الْحَيٰوةُ الدُّنْيَا وَيَسْخَرُوْنَ مِنَ الَّذِيْنَ اٰمَنُوْا

وَالَّذِيْنَ اتَّقَوْا فَوْقَهُمْ يَوْمَ الْقِيٰمَةِ

وَاللّٰهُ يَرْزُقُ مَنْ يَّشَآءُ بِغَيْرِ حِسَابٍ

நிராகரிப்போருக்கு(காஃபிர்களுக்கு) இவ்வுலக வாழ்க்கை அழகாக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் ஈமான் (நம்பிக்கை) கொண்டோரை ஏளனம் செய்கிறார்கள், ஆனால் பயபக்தியுடையோர் மறுமையில் அவர்களைவிட உயர்ந்த நிலையில் இருப்பார்கள், இன்னும் அல்லாஹ் தான் நாடுவோருக்குக் கணக்கின்றிக் கொடுப்பான்.

அல்குர்ஆன் 02: 212

# இறையச்சத்தின் சிறப்புகள் 16

## பயபக்தியாளர்கள் வெற்றியாளர்கள்

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَيَخْشَ اللّٰهَ
وَيَتَّقْهِ فَاُولٰٓـئِكَ هُمُ الْفَآئِزُوْنَ

இன்னும் எவர்கள் அல்லாஹ்வுக்கும்,
அவனுடைய தூதருக்கும் கீழ்படிந்து
அல்லாஹ்வுக்கு பயபக்தி கொள்கிறார்களோ
அவர்கள் தாம் வெற்றி பெற்றவர்கள்.

அல்குர்ஆன் 24:52

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

# இறையச்சத்தின் சிறப்புகள் 17

## பாவமன்னிப்பும், மகத்தான கூலியும்

ذٰلِكَ اَمۡرُ اللّٰهِ اَنۡزَلَهٗۤ اِلَيۡكُمۡ ؕ وَمَنۡ يَّـتَّـقِ اللّٰهَ

يُكَفِّرۡ عَنۡهُ سَيِّاٰتِهٖ وَيُعۡظِمۡ لَهٗۤ اَجۡرًا

இதுவே அல்லாஹ்வின் கட்டளையாகும்,

இதை அவன் உங்களுக்கு இறக்கியருளினான்.

எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து

கொள்ளுகிறாரோ, அவரை அவருடைய பாவங்களை

விட்டும் நீக்கி, அவருக்கு (நற்) கூலியையும்

மகத்தானதாக ஆக்குகின்றான்.

அல்குர்ஆன் 65:5

# இறையச்சத்தின் சிறப்புகள் 18

## சிறந்த கூலி

وَلَاَجۡرُ الۡاٰخِرَةِ خَيۡرٌ لِّلَّذِيۡنَ اٰمَنُوۡا وَكَانُوۡا يَتَّقُوۡنَ

மேலும் பயபக்தி உடையவர்களான முஃமின்களுக்கு மறுமையின் கூலி மிகச் சிறந்ததாக இருக்கும்.

அல்குர்ஆன் 12:57

# இறையச்சத்தின் சிறப்புகள் 19

## பயபக்தியாளர்களுக்கு மேன்மாளிகைகள் உண்டு

لٰكِنِ الَّذِيْنَ اتَّقَوْا رَبَّهُمْ لَهُمْ غُرَفٌ مِّنْ

فَوْقِهَا غُرَفٌ مَّبْنِيَّةٌ تَجْرِىْ مِنْ تَحْتِهَا

وَعْدَ اللّٰهِ لَا يُخْلِفُ اللّٰهُ الْمِيْعَادَ ؕ الْاَنْهٰرُ

ஆனால், எவர்கள் தங்கள் இறைவனுக்கு பயபக்தியுடன் நடந்து கொள்கிறார்களோ அவர்களுக்கு அடுக்கடுக்கான மேன்மாளிகைகள் உண்டு, அவற்றின் கீழே ஆறுகள் சதா ஓடிக் கொண்டிருக்கும். (இதுவே) அல்லாஹ்வின் வாக்குறுதி, அல்லாஹ் தன் வாக்குறுதியில் மாற மாட்டான்"

அல்குர்ஆன் 39:20

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# இறையச்சத்தின் சிறப்புகள் 20

## சுவனத்தில் நற்செய்தி

وَسِيقَ الَّذِينَ اتَّقَوْا رَبَّهُمْ إِلَى الْجَنَّةِ زُمَرًا ۖ
حَتَّىٰ إِذَا جَاءُوهَا وَفُتِحَتْ أَبْوَابُهَا وَقَالَ لَهُمْ
خَزَنَتُهَا سَلَامٌ عَلَيْكُمْ طِبْتُمْ فَادْخُلُوهَا خَالِدِينَ

எவர் தம் இறைவனுக்கு பயபக்தியுடன் நடந்து கொண்டார்களோ அவர்கள் கூட்டங்கூட்டமாக சுவர்க்கத்தின்பால் கொண்டு வரப்படுவார்கள். அங்கு அவர்கள் வந்ததும், அதன் வாசல்கள் திறக்கப்படும், அதன் காவலர்கள் அவர்களை நோக்கி: **உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும், நீங்கள் மணம் பெற்றவர்கள், எனவே அதில் பிரவேசியுங்கள், என்றென்றும் அதில் தங்கிவிடுங்கள்** (என்று அவர்களிடம் கூறப்படும்)"

அல்குர்ஆன் 39:73

# இறையச்சத்தின் சிறப்புகள் 21

مَثَلُ الْجَنَّةِ الَّتِي وُعِدَ الْمُتَّقُونَ فِيهَا أَنْهَٰرٌ مِّن مَّآءٍ غَيْرِ
ءَاسِنٍ وَأَنْهَٰرٌ مِّن لَّبَنٍ لَّمْ يَتَغَيَّرْ طَعْمُهُۥ وَأَنْهَٰرٌ مِّنْ خَمْرٍ
لَّذَّةٍ لِّلشَّٰرِبِينَ وَأَنْهَٰرٌ مِّنْ عَسَلٍ مُّصَفًّى ۖ وَلَهُمْ فِيهَا
مِن كُلِّ الثَّمَرَٰتِ وَمَغْفِرَةٌ مِّن رَّبِّهِمْ كَمَنْ هُوَ خَٰلِدٌ فِي
النَّارِ وَسُقُوا مَآءً حَمِيمًا فَقَطَّعَ أَمْعَآءَهُمْ

பயபக்தி உடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவர்க்கத்தின் உதாரணமாவது: அதில் மாறுபடாத தெளிந்த நீரைக் கொண்ட ஆறுகளும், தன் சுவை மாறாத பாலாறுகளும், அருந்துவோருக்கு இன்பமளிக்கும் மது ரச ஆறுகளும், தெளிவான தேன் ஆறுகளும் இருக்கின்றன, இன்னும், அதில் அவர்களுக்கு எல்லா விதமான கனிவகைகளும், தங்கள் இறைவனின் மன்னிப்பும் உண்டு. (இத்தகையோர்) நரகத்தின் எவன் என்றென்றுமே தங்கியிருந்து, கொதிக்கும் நீர் புகட்டப்பட்டு (அதனால்) குடல்களெல்லாம் துண்டு துண்டாகிவிடுமோ அவனுக்கு ஒப்பாவாரா?"

அல்குர்ஆன் 47:15

# இறையச்சத்தின் சிறப்புகள் 22

## பயபக்தி உடையோருக்கு அல்லாஹ் நற்கூலி அளிக்கிறான்

جَنّٰتُ عَدۡنٍ يَّدۡخُلُوۡنَهَا تَجۡرِىۡ مِنۡ تَحۡتِهَا
الۡاَنۡهٰرُ لَهُمۡ فِيۡهَا مَا يَشَآءُوۡنَ ؕ كَذٰلِكَ يَجۡزِى
اللّٰهُ الۡمُتَّقِيۡنَ ۙ

என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய சுவனபதிகளில் அவர்கள் நுழைவார்கள். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அவர்களுக்கு அங்கே அவர்கள் விரும்புவதெல்லாம் கிடைக்கும். இவ்வாறே பயபக்தியுடையோருக்கு அல்லாஹ் நற்கூலி அளிக்கிறான்"

அல்குர்ஆன் 16:31

# இறையச்சத்தின் சிறப்புகள் 23

وَاُزۡلِفَتِ الۡجَـنَّةُ لِلۡمُتَّقِيۡنَ ۙ

وَبُرِّزَتِ الۡجَحِيۡمُ لِلۡغٰوِيۡنَ ۙ

பயபக்தி உடையவர்களுக்கு அருகில்
சுவனபதி கொண்டு வரப்படும்.

வழி தவறியவர்களுக்கு எதிரே
நரகம் கொண்டு வரப்படும்.

அல்குர்ஆன் 26:90-91

# இறையச்சத்தின் சிறப்புகள் 24

وَسَارِعُوْۤا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ
عَرْضُهَا السَّمٰوٰتُ وَالْاَرْضُ اُعِدَّتْ لِلْمُتَّقِيْنَ ۙ

இன்னும் நீங்கள் உங்கள் இறைவனின்
மன்னிப்பைப் பெறுவதற்கும், சுவனபதியின் பக்கமும்
விரைந்து செல்லுங்கள், அதன் (சுவனபதியின்)
அகலம் வானங்கள், பூமியைப் போலுள்ளது,
அது பயபக்தி உடையோருக்காகவே தயார் செய்து
வைக்கப்பட்டுள்ளது.

அல்குர்ஆன் 26:90-91